முழுப் பதிப்புரிமையுடையது

## இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## திறமை (திறன்கள்) கப்ஸ்ரோன் - 2018 யூலை

# (SS2) தகவல் தொழில்நுட்பவியல் திறன்கள்

(Information Technology skills)

2018-07-28
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 11
வினாக்கள் : 07

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட நேரம் :*** *வாசித்தல் - 15 நிமிடங்கள்*
*எழுதுதல் - 03 மணித்தியாலம்*

(1) ***வினாத்தாள் கட்டமைப்பும் புள்ளிகள் ஒதுக்கீடும் :***

| பகுதி | தேவைப்பாடு | புள்ளிகள் |
|---|---|---|
| A | சகல வினாக்களும் கட்டாயமானவை | 40 |
| B | ஆறு வினாக்களில் நான்கிற்கு மட்டும் விடையளித்தல் வேண்டும். | 60 |
| **மொத்தப் புள்ளிகள்** | | **100** |

(2) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

இருபது (20) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.10** வரையான வினாக்களுக்குப் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவுசெய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.1** பல்பொருள் அங்காடி ஒன்று தனது விசுவாசமான வாடிக்கையாளர்கள் தொடர்பான தகவல்களைக் களஞ்சியப்படுத்துவதற்காக மைக்ரோசொப்ற் அக்ஸஸ் (Microsoft Access) 2016 ஐப் பயன்படுத்தி தரவுத்தளம் ஒன்றை உருவாக்குவதற்கு திட்டமிடுகிறது. இதன் பொருட்டு வாடிக்கையாளர் ஒருவரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் களஞ்சியப்படுத்துவதற்கான மிகப் பொருத்தமான தரவு வகை (data type) எது?

(1) Yes/No (2) Long Text (3) Short Text (4) Attachment

**1.2** வர்த்தக நிறுவனம் ஒன்று தனது விலை பட்டியல்கள் (Invoice) தொடர்பான விபரங்களைக் களஞ்சியப்படுத்துவதற்கு மைக்ரோசொப்ற் அக்ஸஸ் 2016 ஐப் பயன்படுத்தித் தரவுத்தளம் ஒன்றை உருவாக்குவதற்கு திட்டமிடுகிறது. மொத்த விலைப்பட்டியல் தொகையினை (total invoice amount) களஞ்சியப்படுத்துவதற்கு மிகப் பொருத்தமான தரவு வகை எது?

(1) Number. (2) Long Number. (3) Currency. (4) Auto Number.


**1.3** பின்வரும் எந்தக் கோப்பு நீட்சியினை (file extension) சாதாரணமாக மைக்ரோசொப்ற் அக்ஸஸ் (Microsoft Access) ஐப் பயன்படுத்தி திறக்க **முடியாது**?

(1) ACCDB (2) XLSX (3) PPTX (4) CSV

**1.4** கணக்கு உத்தியோகத்தர் ஒருவருக்கு கடன் தொகை, வட்டி வீதம் மற்றும் தவணைக் கொடுப்பனவுத் தொகை போன்றவை தெரிந்திருக்கும்போது, மைக்ரோசொப்ற் எக்செல் (Microsoft Excel) இலுள்ள பின்வரும் எந்தப் பணிக்கூறைப் (function) பயன்படுத்தி கடனை மீளச்செலுத்தும் தவணைகளின் எண்ணிக்கையை (number of installment) அவரால் கணிப்பிடக்கூடியதாக இருக்கும்?

(1) PMT (2) PV (3) NPV (4) NPER

**1.5** வலது கைப் பக்கத்தில் காட்டப்பட்டுள்ள உரு ஆனது மைக்ரோசொப்ற் எக்செல் 2016 இலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஓர் திரை ஒளிப்படம் (screenshot) ஆகும். இவ்வுருவில் உள்ள Members 2016, Members 2017, Members 2018 எனப் பெயரிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் வழங்கப்படுகின்ற பொதுவான பெயர் என்ன?




(1) Workbooks. (2) Worksheets. (3) Formulas. (4) Functions.

**1.6** மனித வள உத்தியோகத்தர் ஒருவர், ஊழியர்களிடமிருந்து பெறப்படுகின்ற லீவு விண்ணப்பப் படிவங்களை ஒரு வாரம் ஈறாக (7 நாட்கள்) பதிவுசெய்கிறார். அவர் ஒன்றுக்கு மேற்பட்ட லீவுகளைப் பெற்றுள்ள ஊழியர்களை இனங்காண்பதற்கு முயற்சிக்கிறார். ஒரே ஊழியரது பெயர் பதிவுசெய்யப்பட்டுள்ள நுண்ணறைகளை (cells) இனங்காண்பதற்கு மைக்ரோசொப்ற் எக்செல் (excel) இலுள்ள பின்வரும் எந்த அம்சத்தினைப் (feature) பயன்படுத்தக் கூடியதாக இருக்கும்? *(சகல பெயர்களும் எழுத்துப் பிழையின்றி பதிவுசெய்யப்பட்டுள்ளன எனக் கருதுக.)*

(1) IF Condition. (2) Conditional Formatting.

(3) AutoSum. (4) Solver.

**1.7** மைக்ரோசொப்ற் பவர்பொயின்ட் (Microsoft PowerPoint) இலுள்ள வில்லைத் தொடர் (slide progression) ஒன்றின் வரிசை ஒழுங்கினை மாற்றுவதற்கான (bypass) தேவையொன்று ஏற்படும் போது, தெரிவுசெய்யப்பட்ட வில்லை ஒன்றை நகர்த்துவதற்குப் பின்வரும் எந்த அம்சத்தைப் (feature) பயன்படுத்த முடியும்?

(1) Action Buttons. (2) Slide Animations.

(3) Slide Transitions. (4) Master Slide.

**1.8** மைக்ரோசொப்ற் வேட் (Microsoft Word) ஆவணம் ஒன்றைப் பாதுகாப்பது தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?

(1) நீங்கள் உங்களுடைய கடவுச்சொல்லை (password) மறந்தாலும்கூட, ஒரு குறுஞ்செய்தியைப் (SMS) பெறுவதன் மூலம் அதனை மீளப்பெற்றுக்கொள்ள (recover) முடியும்.

(2) ஆவணத்தை அணுகுவதற்கு கடவுச்சொல்லுக்குப் (password) பதிலாக கைரேகையினைப் (fingerprint) பயன்படுத்த முடியும்.

(3) ஆவணமொன்றிற்குப் பிரயோகிக்கக்கூடியதான இரண்டு வகைக் கடவுச்சொற்கள் (passwords) காணப்படுகின்றன.

(4) ஆவணமொன்றிற்குப் பிரயோகிக்கக்கூடியதான ஒரேயொரு வகைக் கடவுச்சொல் (password) மாத்திரமே காணப்படுகின்றது.

**1.9** பின்வருவனவற்றுள் **தவறான** வடிவ அமைப்பைக் (format) கொண்டுள்ள மின்னஞ்சல் முகவரி (email address) எது?

(1) student@institute.edu.lk (2) student.name@lk

(3) student.university@institute.lk (4) student.lk@institute.com

**1.10** இலங்கை வாடிக்கையாளர் ஒருவருக்கு இணைய வங்கிச்சேவை, மொபைல் வங்கிச்சேவை அல்லது ATM ஒன்றினைப் பயன்படுத்தி, நிகழ்நிலையில் (real time) இலங்கை வர்த்தக வங்கி ஒன்றிலிருந்து இன்னுமொரு வர்த்தக வங்கிக்குப் பணத்தினை மாற்றீடு செய்வதற்கான தேவை எழும்போது, இதற்கு வசதியளிக்குமுகமாக இலங்கையில் காணப்படுகின்ற புத்தம்புதிய சேவையானது (Newest service) எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) Common Electronic Fund Transfer Switch (CEFTS).

(2) Paypal.

(3) Society for Worldwide Interbank Financial Telecommunication (SWIFT).

(4) BitCoins.

*இல. **1.11** தொடக்கம் **1.16** வரையான வினாக்களிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ள சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க. தெரிவு செய்யப்பட்ட சொல்லை, வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக:*

**1.11** மின்னஞ்சல் ஒன்று அனுப்பப்படும்போது மற்றைய பயனர்களால் அதன் பிரதியொன்று பெற்றுக் கொள்ளப்படுமாறும் அவர்கள் அம்மின்னஞ்சலானது யார் யாருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதைப் பார்க்கக்கூடியவாறும் அனுப்பப்படுவதற்கு மின்னஞ்சலில் காணப்படுகின்ற ………… *(BCC / CC)* தெரிவினைப் பயன்படுத்த முடியும்.

**1.12** இணைய வங்கிச்சேவை போன்ற இரகசியமான கொடுக்கல் வாங்கல்களை முன்னெடுக்கும்போது ………… *(HTTP / HTTPS)* நெறிமுறை (protocol) ஆனது பொருத்தமானதாக அமையாது.

**1.13** மைக்ரோசொப்ற் வேட் (Microsoft Word) போன்ற மைக்ரோசொப்ற் ஒப்பிஸ் (Microsoft Office) பொதியிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட தகவல்களைப் பிரதி (copy) பண்ணுவதற்கு Ctrl key + ............ *(C / V)* key ஆகிய இரு பொத்தான்களையும் ஒருமித்து அழுத்துவது ஒரு குறுகிய வழிமுறை (shortcut) ஆகும்.

**1.14** முன்வைப்பு ஒன்றினைச் செய்வதற்குப் பயிற்சி எடுக்கும்போது, முன்வைப்புச் செய்வதற்கு எடுக்கும் நேரத்தினை மதிப்பீடு செய்வதற்கான தேவை எமக்கு ஏற்படுமாயின், எங்களால் ............ *(Rehearse Timing / Play Narrations)* தெரிவினைப் (Option) பயன்படுத்த முடியும்.

**1.15** மைக்ரோசொப்ற் வேட் (Microsoft Word) இல் பார்வைவழித் தொடர்பாடல் தகவல்களுக்கு (visually communicate information) வரைகலையைக் (graphics) காட்சிப்படுத்துவதற்கான தேவை ஏற்படும்போது நீங்கள் பயன்படுத்த வேண்டிய ஓர் தெரிவு ............ *(Word Art / Smart Art)* ஆகும்.

**1.16** மைக்ரோசொப்ற் பவர்பொயின்ட் முன்வைப்பு (Power Point presentation) ஒன்றினுள் கணிப்பீடுகளுக்காகப் பயன்படுத்தக்கூடிய விரிதாள் கோப்பு (spreadsheet file) ஒன்றினை உள்ளிடுவதற்கான தேவை உங்களுக்கு ஏற்படுமாயின், நீங்கள் ............ *(Chart / Object)* அம்சத்தினை உள்ளிடுவதற்காகத் தெரிவுசெய்தல் வேண்டும்.

*இல. **1.17** தொடக்கம் **1.20** வரையான பின்வரும் ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** என்பதைக் குறிப்பிடுக. தெரிவுசெய்யப்பட்ட விடையை (சரியானது / தவறானது) உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.17** SAP என்பது தற்போது சந்தையில் காணப்படுகின்ற ஓர் முன்னணி ERP மென்பொருளாகும்.

**1.18** ஒரு முடிவில்லா (perpetual) மென்பொருள் உரிமம் ஆனது ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின்னர் காலாவதியாகக் (expires) கூடியது.

**1.19** நிறுவன வலையமைப்பொன்றின் இணையப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கு ஒரு வலை சேவையகத்தினைப் (web server) பயன்படுத்த முடியும்.

**1.20** எடுத்துச் செல்லக்கூடிய சேமிப்புச் சாதனங்களில் (portable storage devices) கோப்புகளை அனுமதியின்றி பிரதியெடுப்பது மிகவும் கடுமையான திருட்டு என்பதுடன் அது நிறுவனங்களிலிருந்து தகவல்கள் வெளிக்கசியும் ஒரு பிரதான மூலமாகவும் இருக்கிறது.

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# <u>பகுதி B</u>

ஏதாவது நான்கு (04) வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

(மொத்தம் 60 புள்ளிகள்)

## வினா 02

ஆடைத் தயாரிப்பாளர் ஒருவரது தரவுத்தளத்தில் காணப்பட்ட ஊழியர்களின் விபரப்பட்டியல் ஒன்றின் பிரித்தெடுப்பு கீழே காட்டப்பட்டுள்ளது :

| ஊழியர் இலக்கம் | குடும்பப் பெயர் | முதற் பெயர் | தே.அ.அ. இல. | நியமனத் திகதி | ஒப்பந்த / நன்னடத்தைக் காலப்பகுதி (நாட்கள்) | அடிப்படைச் சம்பளம் (ரூ.) | அதிகபட்ச மேலதிக நேர மணித்தியாலங் கள் (மாதம் ஒன்றிற்கு) | நிரந்தர ஊழியரா |
|---|---|---|---|---|---|---|---|---|
| E1001 | Arunasiri | Kevin | 800540370 V | 2018-04-01 | 365 | 60,000.00 | 100 | Yes |
| E1002 | Perera | Sanduni | 758152400 V | 2018-05-01 | 365 | 75,000.00 | 120 | Yes |
| E1003 | Yogarajan | Ganesh | 880510400 V | 2018-05-01 | 180 | 60,000.00 | 80 | No |
| E1004 | Selvaraja | Aushyani | 928210450 V | 2018-05-01 | 180 | 50,000.00 | 50 | No |
| E1005 | Rabel | Darshana | 702371588 V | 2018-06-01 | 180 | 60,000.00 | 100 | No |
| E1006 | Perera | Vijaya | 831812566 V | 2018-06-01 | 365 | 90,000.00 | 120 | Yes |
| E1007 | Zubair | Fazly | 833551789 V | 2018-06-01 | 365 | 60,000.00 | 110 | Yes |
| E1008 | Alwis | Jagath | 861401235 V | 2018-07-01 | 365 | 50,000.00 | 120 | Yes |

**குறிப்புகள் :**

- ஒப்பந்த / நன்னடத்தைக் காலமானது வழமையாக 6 மாதங்கள் அல்லது 1 வருடம் ஆகும்.
- அனுமதிக்கப்பட்டுள்ள அதிகபட்ச மேலதிக நேர மணித்தியாலங்கள் மாதமொன்றிற்கு 150 ஆகும்.

மேலுள்ள தரவுகளை மாத்திரம் கவனத்திற்கொண்டு, பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக :

(a) (i) மேலுள்ள புலங்களிலிருந்து பிரதான புலமாக (key field) கருத்திலெடுக்கப்பட வேண்டிய மிகப் பொருத்தமான புலத்தினைத் (most suitable field) **தெரிவுசெய்க.** (02 புள்ளிகள்)

(ii) மேலே பகுதி (i) இல் உங்கள் தெரிவுக்கான காரணத்தைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(b) பின்வரும் புலங்கள் (fields) ஒவ்வொன்றிற்கும் மிகவும் பொருத்தமான தரவு வகையினை (data type) **அடையாளம் காண்க** :

| புலத்தின் பெயர் | தரவு வகை |
|---|---|
| ஊழியர் இலக்கம் | |
| குடும்பப் பெயர் | |
| தே.அ.அ. இலக்கம் | |
| நியமனத் திகதி | |
| ஒப்பந்த / நன்னடத்தைக் காலப்பகுதி | |
| அடிப்படைச் சம்பளம் | |
| அதிகபட்ச மேலதிக நேர மணித்தியாலங்கள் | |
| நிரந்தர ஊழியரா | |

(08 புள்ளிகள்)

(c) மேலே தரப்பட்ட தரவுகளைக் கருத்திற்கொண்டு, வினவல்கள் (queries) தரவுத்தளங்களுக்கு எவ்வாறு பிரயோசனமுடையதாக இருக்கமுடியும் என்பதை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 03

கீழே தரப்பட்டுள்ள உரு ஆனது இலத்திரனியல் சாதனக் கம்பனி ஒன்றின் ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்ட விற்பனை தொடர்பான விபரங்களைக் கொண்ட மைக்ரோசொப்ற் எக்செல் விரிதாள் (Microsoft Excel spreadsheet) ஒன்றிலிருந்தான பிரித்தெடுப்பாகும் :

| | A | B | C | D | E | F | G | H | I |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | |
| 2 | | Employee Number | Name | Televisions | Refrigerators | Microwave Ovens | Total Sales Value (Rs.) | Sales Commission (Rs.) | Tax |
| 3 | | E1001 | A.B.C. Silva | 10 | 20 | 14 | | | |
| 4 | | E1002 | P.Q. Zubair | 5 | 10 | 12 | | | |
| 5 | | E1003 | G.K. Ganesh | 7 | 6 | 15 | | | |
| 6 | | | | | | | | | |
| 7 | | | | | | | | | |
| 8 | | | Item | Unit Price (Rs.) | | | | | |
| 9 | | | Television | 60,000 | | | | | |
| 10 | | | Refrigerator | 100,000 | | | | | |
| 11 | | | Microwave Oven | 20,000 | | | | | |
| 12 | | | | | | | | | |
| 13 | | | | | | | | | |

(a) நுண்ணறை (cell) G3 இற்கான சூத்திரத்தினை (formula) **அடையாளம் காண்க.** இச்சூத்திரம் நுண்ணறைகள் G4 மற்றும் G5 இற்குப் பிரதிபண்ணக்கூடியதாகவும் (copy) உரிய பெறுமதிகளைத் தரக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். மொத்த விற்பனைப் பெறுமதி (total sales value) ஆனது ஒவ்வொரு வகையின் கீழும் விற்பனை செய்யப்பட்ட உருப்படிகளின் (இலத்திரனியல் சாதனங்களின்) எண்ணிக்கையினை அவற்றுக்குரிய அலகு விலையினால் (unit price) பெருக்கி அவற்றை ஒன்றாகக் கூட்டுவதன் மூலம் கணிப்பிடப்படுகிறது என நீங்கள் கருதிக்கொள்ளலாம்.

*(உதாரணமாக, ஒவ்வொரு வகையிலும் ஒவ்வொரு உருப்படி விற்பனை செய்யப்படின் மொத்த விற்பனைப் பெறுமதியாக வரக்கூடிய தொகை ரூ. 180,000/-)*

**குறிப்பு:** நீங்கள் நுண்ணறைத் தொடர்புகளைப் (cell references) பயன்படுத்த வேண்டுமேயொழிய நுண்ணறைப் பெறுமதிகளை (cell values) அல்ல. அத்துடன் நுண்ணறை G3 இல் காட்சிப்படுத்தப்படக்கூடிய பெறுமதியினையும் குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

(b) E1001 இலக்க ஊழியருக்கான விற்பனைத் தரகு (Sales Commission) இனை கணிப்பிடுவதற்காக நுண்ணறை H3 இற்கான சூத்திரத்தினை **அடையாளம் காண்க.** மொத்த விற்பனைப் பெறுமதியானது ரூ.200,000/- இனை விட அதிகமானதாக இருப்பின் மொத்த விற்பனைப் பெறுமதியில் 5% ஆகவும் மொத்த விற்பனைப் பெறுமதியானது ரூ.200,000/- அல்லது அதற்குக் குறைவாக இருப்பின் மொத்த விற்பனைப் பெறுமதியில் 3% ஆகவும் விற்பனைத் தரகு கணிப்பீடு செய்யப்படுகிறது என நீங்கள் கருதிக் கொள்ளலாம். (03 புள்ளிகள்)

(c) விற்பனைத் தரகு ரூ.100,000/- இற்கு மேற்பட்ட தொகையாக இருப்பின், அதன் மீது ஒரு விசேட வருமான வரி விதிக்கப்படுகிறது. விற்பனைத் தரகு வருமானம் ரூ.100,000/- இற்கு மேற்படின் அதற்கு 30% வரி விதிக்கப்படுகிறது.

E1001 இலக்க ஊழியருக்குரிய இந்த வரியைக் கணிப்பீடு செய்வதற்கு நுண்ணறை I3 இற்கான சூத்திரத்தினை **அடையாளம் காண்க.** (03 புள்ளிகள்)

(d) வேலைத்தாள் ஒன்றின் நுண்ணறை H6 ஆனது 12,345.67 எனும் பெறுமதியைக் கொண்டிருப்பின் பின்வரும் பணிக்கூறுகள் (functions) ஒவ்வொன்றிலிருந்தும் கிடைக்கப்பெறும் பெறுமதிகளை (values) **அடையாளம் காண்க.**

(i) ROUND(H6,1)

(ii) ROUND (H6,-1)

(iii) ROUNDUP(H6,0) (03 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 04

தொழில்சார் கணக்கீட்டுத் தகைமையொன்றிற்கான பரீட்சைகளை நடத்தும் கல்வி நிறுவனம் ஒன்றின் பரீட்சைகள் முகாமையாளர் நீங்கள் எனக் கருதிக்கொள்க. உங்களுக்கு மாணவர் ஒருவரிடமிருந்து கீழேயுள்ள மின்னஞ்சல் கிடைக்கப்பெற்றுள்ளது :

| | |
|---|---|
| From: | siribiris.perera@gmail.com |
| To: | exams@institute.org |
| CC: | registration@institute.org |
| Subject: | Exemptions from Accounting subject |
| Message: | அன்பின் ஐயா / அம்மணி,<br><br>நான் உங்கள் கல்வி நிறுவனத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒரு மாணவன் என்பதுடன் 2018 செப்ரெம்பர் மாத கணக்கீட்டுத் தகைமை (மட்டம் 1) பரீட்சைக்காக விண்ணப்பித்தும் உள்ளேன். நான் க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் கணக்கீட்டுப் பாடத்தில் "A" தரச் சித்தியினைப் பெற்றிருந்த காரணத்தால் மட்டம் 1 இலுள்ள கணக்கீட்டு வினாப்பத்திரத்திற்குத் தோற்றத் தேவையில்லை என தங்களது நிறுவனத்திலிருந்து எனக்கு அறிவிக்கப் பட்டிருந்தது. இந்த விலக்களிப்புக்கு நான் தகுதியானவனா என்பது பற்றித் தெளிவுபடுத்தி தயவுசெய்து எனக்கு அறிவிக்க முடியுமா? அதற்கிணங்க, எனது அனுமதி அட்டையினை வழங்க முடியுமாயின் அது பாராட்டுக்குரியதாகும்.<br><br>இப்படிக்கு உண்மையுள்ள,<br><br>**சிறிபிறிஸ் பெரேரா**<br><br>பதிவு இல. A12345<br><br>பின்குறிப்பு : எனது க.பொ.த. உ/த பரீட்சைப் பெறுபேற்றுப் பிரதியொன்றை தங்களின் சரிபார்ப்புக்காக இத்துடன் இணைத்து அனுப்புகின்றேன். |
| Signature Text: | சிறிபிறிஸ் பெரேரா<br>கணக்கு உதவியாளர், **ABC பினான்ஸ், கொழும்பு** |
| Attachments: | GCELAL.PDF |

உங்களுக்குப் பின்வரும் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

கல்வி நிறுவனத்தின் தொடர்பு விபரங்கள் :

தொழில்சார் கணக்காளர்கள் நிறுவனம், இல. 15, ஹைலெவல் வீதி, நுகேகொடை.

தொலைபேசி / தொலைநகல் : +94 112 345 678.

மாணவரால் அனுப்பப்பட்ட மின்னஞ்சலுக்குப் பதிலளிக்குமுகமாக பின்வரும் விடயத்தைத் தெரிவிப்பதற்கு மின்னஞ்சல் அனுப்புவது தொடர்பான தங்களது அறிவினைப் **பிரயோகிக்குக.** மாணவர்களுடனான சகல கடிதத் தொடர்புகள் பற்றியும் மாணவர் விடயங்களுக்குப் பொறுப்பான முகாமையாளரும் (studentaffairs.mgr@institute.org) அறிந்துகொள்ளும் பொருட்டு அவருக்கு கடிதத்தின் பிரதியிடப்படுதல் வேண்டும் என்பது கல்வி நிறுவனத்தின் கொள்கையாகும் எனக் கருதிக்கொள்க. கீழே அடையாளப்படுத்தப் பட்டுள்ள (a) தொடக்கம் (h) வரையான இடைவெளிகளில் நிரப்பப்பட வேண்டிய பொருத்தமான தகவல்களை நீங்கள் உங்களது விடைப் புத்தகத்தில் எழுதுதல் வேண்டும். ஏதாவது எடுகோள் உங்களால் எடுக்கப்பட்டிருப்பின் அதனையும் குறிப்பிடுக.

| | | |
|---|---|---|
| From: | ...................... (a) ...................... | (02 புள்ளிகள்) |
| To: | ...................... (b) ...................... | (02 புள்ளிகள்) |
| CC: | ...................... (c) ...................... | (02 புள்ளிகள்) |
| Subject: | ...................... (d) ...................... | (02 புள்ளிகள்) |
| Message: | அன்பின் திரு. ...................... (e) ...................... <br>உங்கள் மின்னஞ்சலுக்கு நன்றி. உங்களது பெறுபேறு எங்களால் பரீட்சிக்கப்பட்டது. இதன்படி தாங்கள் மட்டம் 1 இல் உள்ள கணக்கீட்டு வினாப்பத்திரத்திற்குத் தோற்றத் தேவையில்லை என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றோம். மட்டம் 1 இற்கான இற்றைப்படுத்தப்பட்ட அனுமதி அட்டை தபால் மூலம் விரைவில் தங்களுக்குக் கிடைக்கப்பெறும். அனுமதி அட்டையின் ஒரு PDF பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. <br>உங்களுக்கு மேலும் தெளிவுபடுத்தல்கள் தேவைப்படின் தயவு செய்து கீழுள்ள எனது தொலைபேசி இலக்கத்தின் ஊடாகத் தொடர்பு கொள்ளவும். <br>இப்படிக்கு உண்மையுள்ள, <br>...................... (f) ...................... | (01 புள்ளி) <br>(02 புள்ளிகள்) |
| Signature Text: | ...................... (g) ...................... | (02 புள்ளிகள்) |
| Attachments: | ...................... (h) ...................... | (02 புள்ளிகள்) |

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 05

(a) தற்போதிருக்கின்ற பெருமளவான இணைய உலாவிகள் (web browsers) “Incognito Window”, “Private Window” எனக் குறிப்பிடப்படுகின்ற ஒரு புதிய உலாவல் சாளரத்தைத் (browsing window) திறப்பதற்கான ஓர் தெரிவினைக் (option) கொண்டிருக்கின்றன.

வழமையான உலாவல் சாளரம் (regular browsing window) ஒன்றை விட அத்தகைய சாளரம் (window) ஒன்றில் காணப்படக்கூடிய வேறுபாட்டினை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) இணைய உலாவி ஒன்றிலுள்ள reload / refresh தெரிவு ஒன்றினால் ஆற்றப்படும் தொழிற்பாட்டினை (function) **அடையாளம் காண்க.** நீங்கள் இந்தத் தெரிவினைப் பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பம் ஒன்றிற்கான உதாரணம் ஒன்றைத் தருக. (03 புள்ளிகள்)

(c) VPN என்பது இணையத் தொடர்பினை மேற்கொள்ளும்போது பயனுள்ள தொழில்நுட்பவியல் ஒன்றைப் குறிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படும் ஓர் சுருக்கக் குறியீடாகும்.

VPN என்னும் பதத்தினால் குறிப்பிடப்படுவதன் பொருளைக் (meaning) கூறுக. இதனால் ஆற்றப்படும் பணி யாது? (03 புள்ளிகள்)

(d) “சில இணைய மற்றும் மொபைல் வங்கிச்சேவை தளங்களை வழமையான பயனர் பெயர்கள் (user names) மற்றும் கடவுச்சொற்களைத் (passwords) தவிர, வேறு செயற்பாடுகளைப் பயன்படுத்தியும் அணுக முடியும்”. இக்கூற்றுடன் நீங்கள் இணங்குகிறீர்களா? உங்கள் விடையினை நியாயப்படுத்துக. (03 புள்ளிகள்)

(e) அருகில் காட்டப்பட்டுள்ள உரு ஆனது பத்திரிகைகள் மற்றும் ஊக்குவிப்புத் துண்டுப்பிரசுரங்கள் ஆகியவற்றில் பிரபலமான ஒன்றாகும். இத்தகைய உருக்களுக்கு வழங்கப்படும் பெயரை **அடையாளம் காண்க.** அத்துடன் அவற்றின் பயனுக்கான உதாரணம் ஒன்றை (01) **கூறுக.**

(03 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 06

வியாபார மேம்படுத்தலுக்கான துண்டுப்பிரசுரம் ஒன்றை வடிவமைக்கும் பணி உங்களுக்குத் தரப்பட்டுள்ளதாக கருதிக்கொள்க. கீழேயுள்ள உரு இறுதியாக வடிவமைக்கப்பட்ட துண்டுப்பிரசுரத்தைக் காட்டுகிறது :



எழுத்துரு (font) மாற்றம் செய்யப்படவில்லை எனக் கருதுக. மேலே துண்டுப்பிரசுரத்திலுள்ள பின்வரும் கூறுகள் ஒவ்வொன்றையும் மாற்றம் (convert) செய்யப் பயன்படுத்தக்கூடிய மைக்ரோசொப்ற் வேட் (Microsoft Word) இலுள்ள அம்சங்களை features) **அடையாளம் காண்க.**

(a) "Sale" எனப் பெயரிடப்பட்டுள்ள உருவை, இங்கு தரப்பட்டது போன்று மாற்றம் செய்வதற்குப் பயன்படுத்தக்கூடிய அம்சம்




(02 புள்ளிகள்)

(b) *"REEMIX Mid-Year Clearance Sale"* என்னும் வாக்கியத்தின் தோற்றத்தை (appearance) மாற்றம் செய்வதற்குப் பயன்படுத்தக்கூடிய அம்சம் (02 புள்ளிகள்)

(c) *"50%"* என்னும் சொல்லின் தோற்றத்தையும் (appearance) இடவமைவையும் (position) மாற்றம் செய்வதற்குப் பயன்படுத்தக்கூடிய அம்சம் (03 புள்ளிகள்)

(d) இங்கு தரப்பட்டது போன்று உருவின் தோற்றத்தையும் இடவமைவையும் மாற்றம் செய்வதற்குப் பயன்படுத்தக்கூடிய அம்சம்



(03 புள்ளிகள்)

(e) *"Hurry Up offer until stocks last or until 1st August 2018 Only"* என்னும் வாக்கியத்தை கிராபிக் (graphic) ஒன்றினுள் காட்சிப்படுத்துவதற்குப் பயன்படுத்தக்கூடிய அம்சம் (03 புள்ளிகள்)

(f) தொலைபேசி இலக்கத்தின் தோற்றத்தையும் இடவமைவையும் மாற்றம் செய்வதற்குப் பயன்படுத்தக் கூடிய அம்சம் (02 புள்ளிகள்)

(Total 15 புள்ளிகள்)

## வினா 07

(a) மைக்ரோசொப்ற் பவர் பொயின்ட் (Microsoft PowerPoint) இலுள்ள பின்வரும் அம்சங்களால் ஆற்றப்படும் பணிகளை **விபரிக்குக.**

(i) Handout Master.

(ii) Ink Annotations / Start Inking.

(iii) Add-Ins.

(iv) Online Pictures.

(v) Play Narrations.

(vi) Insert Icons. (ஒவ்வொன்றிற்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 12 புள்ளிகள்)

(b) உங்களுடைய தேயிலை ஏற்றுமதிக் கம்பனிக்கு வருகை தந்துள்ள வெளிநாட்டுக் கொள்வனவாளர் ஒருவருக்கு, உங்கள் கம்பனியைப் பற்றிய முன்வைப்பு (presentation) ஒன்றினை செய்யுமாறு நீங்கள் கேட்கப்பட்டுள்ளீர்கள். உங்களுடைய முன்வைப்பு, உங்கள் கம்பனியின் கூட்டம் நடத்தும் அறையிலுள்ள மேசைக் கணினியில் (desktop computer) இருக்கிறது. பவர்பொயின்ட் முன்வைப்பு கோப்பினை (Powerpoint presentation file) வெற்றிகரமாகத் திறந்ததன் பின்னர், உங்களுடைய சுட்டியின் (mouse) நகர்வு திடீரெனச் செயலிழந்ததுடன் சுட்டியை இனி நகர்த்த முடியாது என்பதையும் நீங்கள் அறிந்து கொண்டீர்கள். அங்கு வேறு எவ்வித கணினிகளோ அல்லது சுட்டிகளோ இல்லை எனக் கருதிக்கொள்க.

நீங்கள் முன்வைப்பினை எவ்வாறு தொடங்க முடியும் என்பதை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*